## தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

ஆணை எண்.96/மா/2025
நாள் 19.09.2025

திரு. S.V. உதயகுமார்
நாகர்கோவில் — முறையீட்டு மனுதாரர்

ஆணையர்
நாகர்கோவில் மாநகராட்சி — எதிர் மனுதாரர்

நாகர்கோவில், பார்வதிபுரம், M.S ரோடு, கதவு எண் 439A என்கிற முகவரியில் வசிக்கும் திரு. S.V.உதயகுமார் என்பவரின் 16.01.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 20.01.2025 அன்று பெறப்பட்டு 96/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

நாகர்கோவில், பார்வதிபுரம், M.S ரோடு, கதவு எண் 439A என்கிற முகவரியில் வசிக்கும் திரு. S.V.உதயகுமார் என்பவர் 16.01.2025 நாளிட்ட தனது மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்.

"மக்களுடன் முதல்வர் திட்டம் குறித்தான 12 கூட்டங்கள் நாகர்கோவில் மாநகராட்சியால் நடத்தப்பட்டுள்ளது.

மேற்படி திட்டம் குறித்தான கூட்டங்களில் கலந்து கொள்ள வருகை தரும் பொது மக்களுக்கு தேநீர் வழங்கிடுதல் மற்றும் இதர செலவினங்களுக்கு விலை புள்ளி விவரங்கள் பெறப்பட்டதாக குறிப்பிட்டு மாநகராட்சி நிதியிலிருந்து மொத்தமாக ரூ.40,33,270/– குறிப்பிட்ட மாநகராட்சி ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டது. முறைகேடான செயலாக உள்ளது.

முறைகேடு: கூட்டத்திற்கு வருகை தர உள்ள பொதுமக்களின் எண்ணிக்கை விவரம் முன்கூட்டியே அறிந்திட இயலாத நிலையில் செலவின விபரங்கட்கு எந்த அடிப்படையில் விலைப்புள்ளி விவரங்கள் பெறப்பட்டன என்பதும் அளவுக்கு அதிகமான செலவினம் மேற்கொண்டதும் நிர்ணயிக்கப்பட்ட ஒப்பந்ததாரரை நியமனம் செய்ததும் முறைக்கேடானதாகும்.

நகராட்சி நிர்வாக இயக்குநர் சுற்றறிக்கை ந.க.எண்.21335/2021/M2 நாள் 14.11.2023 இதன்படி விலை புள்ளி பெற சுமார் ஒரு மாதகாலம் இருந்தும் விலை புள்ளிக்கு எந்த

செய்தித்தாள்களிலும் விளம்பரம் பிரசுரம் செய்யப்படாமல் நேரடியாக விலை புள்ளி விவரங்கள் பெறப்பட்டுள்ளன.

Jenkins, Dream Media, Sasinkar (P) Ltd., Nagercoil, Royal Creators நான்கு பேரும் விலை புள்ளி கேட்டு இருந்தும் நாகர்கோவில் மாநகராட்சியின் ஒப்பந்ததாரரான Jenkins என்பவருக்கு எட்டு இடங்கட்கான செலவினத்திற்கு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. நான்கு மையங்கள் Dream Media-விற்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே விலைப்புள்ளியில் கலந்துள்ள மூன்று ஒப்பந்ததாரர்களின் விலை புள்ளி ஆணையாளருக்கு வழங்கிய கடிதம் அவர்களின் GST எண்கள் ஆகியவற்றை முறையாக விசாரணை செய்ய வேண்டும்.

மக்களுடன் முதல்வர் திட்டம் 12 கூட்டங்கள் நடைபெற்றுள்ளது. ஒவ்வொரு கூட்டத்திற்கும் நாகர்கோவில் மாநகராட்சியில் தனி தனி விலை புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. ஆனால் தேநீர் வழங்குவதற்கு மட்டும் 12 கூட்டத்திற்கும் சேர்த்து ஒரே விலை புள்ளி ரூபாய் 8,48,830/– Rehovot Groups பெறப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாகத் துறையில் 2 லட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் மதிப்பிற்கு மேல் உள்ள பணிகளுக்கு மட்டுமே GST 18 சதவீதம் வழங்கப்படுகிறது. 12 பணிகளுக்கும் தேநீர் செலவிற்கு தனித்தனியே விலை புள்ளி வாங்கப்பட்டிருந்தால் GST 18 சதவீதம் நாகர்கோவில் மாநகராட்சிக்கு சேமிப்பு ஆகியிருக்கும். இதனால் வருவாய் இழப்பீடு ஏற்பட்டுள்ளது.

எதிர்பாராத செலவுகள் செய்வதற்கு பொறியியல் துறைக்கு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998 பிரிவு 57(7) இருந்தும் இதை பயன்படுத்தாமல் விலை புள்ளி பெற்று பெருந்தொகை கையாடல் செய்யப்பட்டுள்ளது. எனவே இதன் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

2. மனுதாரர் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம் முறைமன்ற நடுவ 07.04.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் நாகர்கோவில் மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

3. நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் தனது 01.08.2025 நாளிட்ட கடிதம் ந.க. எண் 5643/2025/இ1–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

"மக்களுடன் முதல்வர் என்ற திட்டத்தின் மூலம் பொதுமக்களின் கோரிக்கைகளை அவர்கள் இருப்பிடத்திலேயே நிவர்த்தி செய்ய தேர்ந்தெடுக்கப்பட்ட மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் நடத்திட அரசு உத்தேசிக்கப்பட்டு சிறப்பு அலுவலர் முதல்வரின் முகவரித் துறை அவர்களின் கடித எண் 946/Sec.4/2023 நாள் 09.11.2023–இன்படி வழிகாட்டி நெறிமுறைகள் (SOPs) வெளியிடப்பட்டுள்ளது. மேற்படி வழிகாட்டு நெறிமுறைகளின்படி நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க. எண் 21335/2021/M2 நாள் 14.11.2023–இன்படி மொத்தம் 12 முகாம்கள் நடத்திடவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

- இத்திட்டத்தின் கீழ் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை தொடர்புடைய 8 சேவைகளுக்கான மனுக்களை பெற்று உரிய காலக்கெடுவிற்குள் தீர்வு காணப்படவேண்டும்.
- இம்முகாம் நடைபெறும் இடங்களில் தேவையான அடிப்படை வசதிகளான குடிநீர் இருக்கை வசதி, மின்சார வசதி, போதிய கணினிகள், பொது சுகாதாரம், ஆண் மற்றும் பெண்களுக்கு தனிதனியாக கழிப்பறை வசதி, மருத்துவ முதலுதவி மற்றும் உரிய இணைய சேவைகள் இருப்பதை உறுதி செய்யப்பட வேண்டும்.
- முகாம் நடைபெறும் பகுதிகளில் இணைய சேவை துரிதமாக வழங்கும் சேவை பிரிவை தேர்வு செய்யப்பட வேண்டும்.

➢ இம்முகாம் நடைபெறும் மையங்களில் முதியோர் கர்ப்பிணி பெண்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் உள்ளிட்டோர் பங்கேற்க உரிய சிறப்பு வசதிகள் செய்து தரப்பட வேண்டும்.

மேற்படி முகாம் நடைபெறும் விவரத்தினை பொதுமக்கள் அறியும் வண்ணம் போதிய விளம்பரங்களை செய்தி பிரசுரங்கள் மின்னணு மற்றும் சமூக வலைதளங்கள் மூலமாக முகாம் நடைபெறும் நாள் நேரம் மற்றும் நடத்தப்படும் இடம் ஆகியவற்றை முகாம் நடைபெறுவதற்கு முன்பாக தெரிவித்து பெரும்பாலான மக்கள் பங்கேற்கும் வகையில் சிறப்புடன் நடத்திட வேண்டும்.

அனைத்து முகாம்களுக்கும் ஒரே பகுதியில் நடத்தப்படாமல் பரவலாக அனைத்து வார்டு மக்களுக்கும் எளிதில் அணுகும் வகையில் முகாம் நடைபெறும் வகையில் இடத்தை தேர்வு செய்ய வேண்டும். நகர்புற உள்ளாட்சிகளுக்கு சொந்தமான சமுதாயக்கூடம் அல்லது திருமண மண்டபத்தினை தேர்வு செய்யலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளதன்படி இம்மாநகராட்சி பகுதிகளில் 12 முகாம் நடத்திட உத்தேசிக்கப்பட்டு (Pilot scheme உட்பட) கீழ்காணும் விவரப்படி தேர்வு செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | முகாம் நடைபெற்ற இடம் | நாள் | விலைப் புள்ளி சமர்ப்பித்த விவரம் | குறைந்த விலைப்புள்ளி & தீர்மானம் எண் |
|---|---|---|---|---|
| 1. | மாநகராட்சி சமூக நலக் கூடம், ஆளூர் | 22.11.2023 | 1. டிரீம்ஸ் மீடியா ரூ.458050<br>2. YDA கிரியேட்டிங் ரூ.467050<br>3. ரெட் ஈவன்ட் மேனேஜ்மென்ட் ரூ.462850 | டிரீம்ஸ் மீடியா ரூ.458050 (908/29.12.2023) |
| 2. | AS தங்கவேல் மண்டபம் | 27.12.2023 | 1. டிரீம்ஸ் மீடியா ரூ.251930<br>2. சசிங்கர் பிரைவேட் லிமிடெட் ரூ.255470<br>3. R. ஜெங்கின்ஸ் ரூ.260190 | டிரீம்ஸ் மீடியா ரூ.251930 (115/23.02.2024) |
| 3. | தெ.தி. இந்து கல்லூரி, நாகர்கோவில் | 28.12.2023 | 1. R. ஜெங்கின்ஸ் ரூ.270810<br>2. டிரீம்ஸ் மீடியா ரூ.286150<br>3. சசிங்கர் பிரைவேட் லிமிடெட் ரூ.284970 | R. ஜெங்கின்ஸ் ரூ.270810 (122/23.02.2024) |

| | | | | |
|---|---|---|---|---|
| 4. | VGS ஹால், நாகர்கோவில் | 29.12.2023 | 1. R. ஜெங்கின்ஸ் ரூ.243670<br>2. டிரீம்ஸ் மீடியா ரூ.246030<br>3. சசிங்கர் பிரைவேட் லிமிடெட் ரூ.249070 | R. ஜெங்கின்ஸ் ரூ.243670 (120/23.02.2024) |
| 5. | பசுபதிஸ்வரர் பிரசன்ன பார்வதி மண்டபம் | 30.12.2023 | 1. R. ஜெங்கின்ஸ் ரூ.243080<br>2. டிரீம்ஸ் மீடியா ரூ.249570<br>3. ராயல் கிரியேட்டர்ஸ் ரூ.243670 | R. ஜெங்கின்ஸ் ரூ.243080 (113/23.02.2024) |
| 6. | செபஸ்தியார் சமுதாய நலக்கூடம் | 03.01.2024 | 1. R. ஜெங்கின்ஸ் ரூ.237770<br>2. டிரீம்ஸ் மீடியா ரூ.249570<br>3. சசிங்கர் பிரைவேட் லிமிடெட் ரூ.243670 | R. ஜெங்கின்ஸ் ரூ.237770 (117/23.02.2024) |
| 7. | மாதாமஹால், நாகர்கோவில் | 04.01.2024 | 1. R. ஜெங்கின்ஸ் ரூ.241310<br>2. டிரீம்ஸ் மீடியா ரூ.251930<br>3. சசிங்கர் பிரைவேட் லிமிடெட் ரூ.255470 | R. ஜெங்கின்ஸ் ரூ.241310 (123/23.02.2024) |
| 8. | MDB மஹால், நாகர்கோவில் | 05.01.2024 | 1. டிரீம்ஸ் மீடியா ரூ.249570<br>2. R. ஜெங்கின்ஸ் ரூ.257830<br>3. ராயல் கிரியேட்டர்ஸ் ரூ.253110 | டிரீம்ஸ் மீடியா ரூ.249570 (119/23.02.2024) |
| 9. | பாரிஸ் ஹால், ராணி தோட்டம், நாகர்கோவில் | 06.01.2024 | 1. R. ஜெங்கின்ஸ் ரூ.254290<br>2. டிரீம்ஸ் மீடியா ரூ.255470<br>3. ராயல் கிரியேட்டர்ஸ் ரூ.259010 | R. ஜெங்கின்ஸ் ரூ.254290 (121/23.02.2024) |

| | | | | |
|---|---|---|---|---|
| 10. | பழைய மாநகராட்சி அலுவலகம், நாகர்கோவில் | 08.01.2024 | 1. டிரீம்ஸ் மீடியா ரூ.247210<br>2. R. ஜெங்கின்ஸ் ரூ.251930<br>3. ராயல் கிரியேட்டர்ஸ் ரூ.259010 | டிரீம்ஸ் மீடியா ரூ.247210 (118/23.02.2024) |
| 11. | சிவகாமி அம்மாள் மண்டபம், நாகர்கோவில் | 09.01.2024 | 1. R. ஜெங்கின்ஸ் ரூ.241310<br>2. டிரீம்ஸ் மீடியா ரூ.246030<br>3. சசிங்கர் பிரைவேட் லிமிடெட் ரூ.253110 | R. ஜெங்கின்ஸ் ரூ.241310 (114/23.02.2024) |
| 12. | சிவதாணு மண்டபம், நாகர்கோவில் | 12.01.2024 | 1. R. ஜெங்கின்ஸ் ரூ.245440<br>2. டிரீம்ஸ் மீடியா ரூ.247210<br>3. ராயல் கிரியேட்டர்ஸ் ரூ.253110 | R. ஜெங்கின்ஸ் ரூ.245440 (116/23.02.2024) |
| 13. | 12 முகாம்களுக்கு உணவு, குடிநீர், தேநீர் வழங்குதல் | | 1. ரெகோவாத் குரூப்ஸ் ரூ.848830<br>2. கருடா குரூபஸ் ரூ.930000<br>3. கிரிஷ்இம்பெக்ஸ் ரூ.899500 | ரெகோவாத் குரூப்ஸ் ரூ.848830 (232/23.02.2024) |

மேற்படி முகாமிற்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகள் செய்ய மாமன்றத்தில் முறையாக அனுமதி பெற்று 12 முகாம்கள் நடத்தி முடிக்கப்பட்டுள்ளது. மேற்படி இத்திட்டம் அரசின் கொள்கை முடிவின்படி நடத்தப்பட்டுள்ளதால் அனைத்து பணிகளும் விதிமுறைகளின் படியே செய்து முடிக்கப்பட்டுள்ளது.

எனவே மாண்புமிகு உள்ளாட்சி முறைமன்ற நடுவம் மேற்கூறிய இவ்வறிக்கையினை ஏற்று புகார் மனுவினை தள்ளுபடி செய்து உத்தரவு பிறப்பிக்குமாறு பணிவுடன் சமர்ப்பித்துக் கொள்கிறேன்.'' என தெரிவித்துள்ளார்.

4. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 12.08.2025 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 24.07.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் 12.08.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

> ''மக்களுடன் முதல்வர் திட்டம் குறித்தான 12 கூட்டங்கள் நாகர்கோவில் மாநகராட்சியால் நடத்தப்பட்டுள்ளன . கூட்டங்களில் கலந்து கொள்ள வருகை தரும் பொது மக்களுக்கு தேநீர் வழங்குதல் மற்றும் இதர செலவினங்களுக்கு விலை புள்ளி விவரங்கள் பெறப்பட்டதாக குறிப்பிட்டு நாகர்கோவில் மாநகராட்சி நிதியிலிருந்து மொத்தமாக

ரூ.40,33,270/– குறிப்பிட்ட நாகர்கோவில் மாநகராட்சி ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டது முறைகேடான செயல் ஆகும்.

கூட்டத்திற்கு வரவுள்ள பொதுமக்களின் எண்ணிக்கை விவரம் முன்கூட்டியே அறியாத நிலையில் செலவின விபரங்கட்கு எந்த அடிப்படையில் விலைப்புள்ளி விவரங்கள் பெறப்பட்டன என்பதும் மற்றும் அளவுக்கு அதிகமான செலவினம் மேற்கொண்டதற்கு நிர்ணயிக்கப்பட்ட ஒப்பந்ததாரரை நியமனம் செய்ததும் முற்றிலும் முறைக்கேடான செயலாகும்.

நகராட்சி நிர்வாக இயக்குநர் சுற்றறிக்கை ந.க.எண்.21335/2021/M2 நாள் 14.11.2023–ன்படி விலை புள்ளி பெற சுமார் ஒரு மாதகாலம் இருந்தும் விலை புள்ளிக்கு எந்தவொரு செய்தித்தாள்களிலும் விளம்பரம் பிரசுரம் செய்யாமல் நேரடியாக விலைபுள்ளி விவரங்கள் பெறப்பட்டன.

Jenkins, Dream Media, Sasinkar (P) Ltd., Nagercoil, Royal Creators ஆகிய 4 பேரும் விலை புள்ளி கேட்டு இருந்தாலும், நாகர்கோவில் ஒப்பந்ததாரரான Jenkins என்பவருக்கு 8 இனங்களுக்கான செலவினத்திற்கு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. நான்கு மையங்கள் Dream Media-விற்கு வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட 12 கூட்டங்களுக்கும் தனி தனி விலைபுள்ளிகள் பெறப்பட்டுள்ளன. ஆனால் தேநீர் வழங்குவதற்கு மட்டும் 12 கூட்டத்திற்கும் சேர்த்து ஒரே விலை புள்ளி ரூ.8,48,830/–ஐ Rehovot Groups-யிடமிருந்து வழங்கப்பட்டுள்ளது.நகராட்சி நிர்வாகத் துறையில் ரூ 2,50,000/– மதிப்பிற்கு மேல் உள்ள பணிகளுக்கு மட்டுமே GST 18 சதவீதம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 12 பணிகளுக்கு தேநீர் செலவிற்கு தனித்தனியே விலை புள்ளி பெற்று இருந்தால் GST 18 சதவீதம் செலுத்தாமல் நாகர்கோவில் மாநகராட்சிக்கு சேமிப்பு ஆகியிருக்கும்.

மேலே குறிப்பிட்டுள்ள 12 கூட்டங்களுக்கு மாநகராட்சியைச் சேர்ந்த அரசு ஊழியர்களுக்கு உணவு அளித்தது சம்பந்தமான செலவினத் தொகையை மாநகராட்சி கணக்கில் வரவு வைத்தது தவறான செயலாகும்.

எதிர்பாராத செலவுகள் செய்வதற்கு பொறியியல் துறைக்கு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998 பிரிவு 57(7) இருந்தும் இதை பயன்படுத்தாமல் விலைபுள்ளி பெற்று பெருந்தொகை கையாடல் செய்த நாகர்கோவில் மாநகராட்சி சம்பந்தப்பட்ட ஊழியர்கள் மீது நடவடிக்கை எடுக்க நாகர்கோவில் மாநகராட்சி ஆணையருக்கு உத்திரவிடுமாறு இம்முறைமன்ற நடுவர் அவர்களை பணிவுடன் வேண்டுகிறேன்.

மேற்கண்ட புகார்கள் குறித்து 50 பக்கங்கள் கொண்ட ஆவணம் – வால்யூம்–I இத்துடன் இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பிக்கிறேன்.'' என தெரிவித்துள்ளார்.

6. நாகர்கோவில் மாநகராட்சியின் இளநிலை பொறியாளர் 12.08.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

“மக்களுடன் முதல்வர் என்ற திட்டத்தின் மூலம் பொதுமக்களின் கோரிக்கைகளை அவர்கள் இருப்பிடத்திலேயே நிவர்த்தி செய்ய தேர்ந்தெடுக்கப்பட்ட மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் நடத்திட அரசு உத்தேசிக்கப்பட்டு சிறப்பு அலுவலர் முதல்வரின் முகவரித் துறை அவர்களின் கடித எண் 946/Sec.4/2023 நாள் 09.11.2023–இன்படி வழிகாட்டு நெறிமுறைகள் (SOPs) வெளியிடப்பட்டுள்ளது. மேற்படி வழிகாட்டு நெறிமுறைகளின்படி

நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க. எண் 21335/2021/M2 நாள் 14.11.2023–இன்படி மொத்தம் 12 முகாம்கள் நடத்திடவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

- இத்திட்டத்தின் கீழ் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை தொடர்புடைய 8 சேவைகளுக்கான மனுக்களை பெற்று உரிய காலக்கெடுவிற்குள் தீர்வு காணப்படவேண்டும்.
- இம்முகாம் நடைபெறும் இடங்களில் தேவையான அடிப்படை வசதிகளான குடிநீர் இருக்கை வசதி, மின்சார வசதி, போதிய கணினிகள், பொது சுகாதாரம், ஆண் மற்றும் பெண்களுக்கு தனிதனியாக கழிப்பறை வசதி, மருத்துவ முதலுதவி மற்றும் உரிய இணைய சேவைகள் இருப்பதை உறுதி செய்யப்பட வேண்டும்.
- முகாம் நடைபெறும் பகுதிகளில் இணைய சேவை துரிதமாக வழங்கும் சேவை பிரிவை தேர்வு செய்யப்பட வேண்டும்.
- இம்முகாம் நடைபெறும் மையங்களில் முதியோர் கர்ப்பிணி பெண்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் உள்ளிட்டோர் பங்கேற்க உரிய சிறப்பு வசதிகள் செய்து தரப்பட வேண்டும்.

அனைத்து முகாம்களுக்கும் ஒரே பகுதியில் நடத்தப்படாமல் பரவலாக அனைத்து வார்டு மக்களும் எளிதில் அணுகும் வகையில் முகாம் நடைபெறும் வகையில் இம்மாநகராட்சி பகுதிகளில் 12 முகாம் நடத்திட உத்தேசிக்கப்பட்டு (Pilot scheme உட்பட) கீழ்காணும் இடங்களில் நடைபெற்றது என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது:

| வ. எண் | முகாம் நடைபெற்ற இடம் மற்றும் நாள் | குறைந்த விலைப்புள்ளி |
|---|---|---|
| 1. | மாநகராட்சி சமூக நலக் கூடம், ஆளூர் – 22.11.2023 | டிரீம்ஸ் மீடியா – ரூ.4,58,050/– |
| 2. | AS தங்கவேல் மண்டபம் – 27.12.2023 | டிரீம்ஸ் மீடியா – ரூ.2,51,930/– |
| 3. | தெ.தி. இந்து கல்லூரி, நாகர்கோவில் – 28.12.2023 | R. ஜெங்கின்ஸ் – ரூ.2,70,810/– |
| 4. | VGS ஹால், நாகர்கோவில் – 27.12.2023 | R. ஜெங்கின்ஸ் – ரூ.2,43,670/– |
| 5. | பசுபதிஸ்வரர் பிரசன்ன பார்வதி மண்டபம் – 30.12.2023 | R. ஜெங்கின்ஸ் – ரூ.2,43,080/– |
| 6. | செபஸ்தியார் சமுதாய நலக்கூடம் – 03.01.2024 | R. ஜெங்கின்ஸ் – ரூ.2,37,770/– |
| 7. | மாதாமஹால், நாகர்கோவில் – 04.01.2024 | R. ஜெங்கின்ஸ் – ரூ.2,41,310/– |
| 8. | MDB மஹால், நாகர்கோவில் – 05.01.2024 | டிரீம்ஸ் மீடியா – ரூ.2,49,570/– |
| 9. | பாரிஸ் ஹால், நாகர்கோவில் – 06.01.2024 | R. ஜெங்கின்ஸ் – ரூ.2,54,290/– |
| 10. | பழைய மாநகராட்சி அலுவலகம், நாகர்கோவில் – 08.01.2024 | டிரீம்ஸ் மீடியா – ரூ.2,47,210/– |
| 11. | சிவகாமி அம்மாள் மண்டபம், நாகர்கோவில் – 09.01.2024 | R. ஜெங்கின்ஸ் – ரூ.2,41,310/– |
| 12. | சிவதாணு மண்டபம், நாகர்கோவில் – 12.01.2024 | R. ஜெங்கின்ஸ் – ரூ.2,45,440/– |
| 13. | 12 முகாம்களுக்கு உணவு, குடிநீர், தேநீர் வழங்குதல் | ரெகோவாத் குரூப்ஸ் – ரூ.8,48,830/– |

மேற்படி முகாமிற்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகள் செய்ய முறையான ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு மாமன்றத்தில் முறையாக அனுமதி பெற்று 12 முகாம்கள் நடத்தி முடிக்கப்பட்டுள்ளது. மேற்படி இத்திட்டம் அரசின் கொள்கை முடிவின்படி நடத்தப்பட்டுள்ளதால் அனைத்து பணிகளும் விதிகளின்படியே செய்து முடிக்கப்பட்டுள்ளது என்று இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.''

7. மனுதாரரின் மனு, வாக்குமூலம், நாகர்கோவில் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் இளநிலை பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன.

மக்களுடன் முதல்வர் திட்டம் குறித்தான 12 கூட்டங்கள் நாகர்கோவில் மாநகராட்சியால் நடத்தப்பட்டதில் கூட்டங்களில் கலந்து கொள்ள வருகை தரும் பொது மக்களுக்கு தேநீர் வழங்குதல் மற்றும் இதர செலவினங்களுக்கு விலை புள்ளி விவரங்கள் பெறப்பட்டதாக குறிப்பிட்டு நாகர்கோவில் மாநகராட்சி நிதியிலிருந்து மொத்தமாக ரூ.40,33,270/– குறிப்பிட்ட நாகர்கோவில் மாநகராட்சி ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டது என்பதும், கூட்டத்திற்கு வருகை தரவுள்ள பொதுமக்களின் எண்ணிக்கை விவரம் முன்கூட்டியே அறியாத நிலையில் செலவின விவரங்கட்கு எந்த அடிப்படையில் விலைப்புள்ளி விவரங்கள் பெறப்பட்டன என்பதும் மற்றும் அளவுக்கு அதிகமான செலவினம் மேற்கொண்டதற்கு நிர்ணயிக்கப்பட்ட ஒப்பந்ததாரரை நியமனம் செய்தது என்பதும், நகராட்சி நிர்வாக இயக்குநர் சுற்றறிக்கையின்படி விலை புள்ளி பெற சுமார் ஒரு மாதகாலம் இருந்தும், விலை புள்ளிக்கு எந்தவொரு செய்தித்தாள்களிலும் விளம்பரம் பிரசுரம் செய்யாமல் நேரடியாக விலைபுள்ளி விவரங்கள் பெறப்பட்டன என்பதும், Jenkins, Dream Media, Sasinkar (P) Ltd., Nagercoil, Royal Creators ஆகிய 4 பேரும் விலை புள்ளி கேட்டு இருந்தாலும், நாகர்கோவில் ஒப்பந்ததாரரான Jenkins என்பவருக்கு 8 இனங்களுக்கான செலவினத்திற்கு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது என்பதும், நான்கு மையங்கள் Dream Media-விற்கு வழங்கப்பட்டுள்ளது என்பதும், மேற்கண்ட 12 கூட்டங்களுக்கும் தனி தனி விலைபுள்ளிகள் பெறப்பட்டுள்ளன என்பதும், ஆனால் தேநீர் வழங்குவதற்கு மட்டும் 12 கூட்டத்திற்கும் சேர்த்து ஒரே விலை புள்ளியாக ரூ.8,48,830/–ஐ Rehovot Groups–க்கு வழங்கப்பட்டுள்ளது என்பதும், நகராட்சி நிர்வாகத் துறையில் ரூ.2,50,000/– மதிப்பிற்கு மேல் உள்ள பணிகளுக்கு மட்டுமே GST 18 சதவீதம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்பதும், 12 பணிகளுக்கு தேநீர் செலவிற்கு தனித்தனியே விலை புள்ளி பெற்று இருந்தால் GST 18 சதவீதம் செலுத்தாமல் நாகர்கோவில் மாநகராட்சிக்கு சேமிப்பு ஏற்பட்டிருக்கும் என்பதும், மேலே குறிப்பிட்டுள்ள 12 கூட்டங்களுக்கு மாநகராட்சியைச் சேர்ந்த அரசு ஊழியர்களுக்கும் உணவு அளித்தது சம்பந்தமான செலவினத் தொகையை மாநகராட்சி கணக்கில் வரவு வைத்தது தவறான செயலாகும் என்பதும், எதிர்பாராத செலவுகள் செய்வதற்கு பொறியியல் துறைக்கு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம், 1998, பிரிவு 57(7) இருந்தும், இதை பயன்படுத்தாமல் விலைபுள்ளி பெற்று பெருந்தொகை கையாடல் செய்த நாகர்கோவில் மாநகராட்சி சம்பந்தப்பட்ட ஊழியர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளது மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலத்திலிருந்து அறிய முடிகிறது.

மக்களுடன் முதல்வர் என்ற திட்டத்தின் மூலம் பொதுமக்களின் கோரிக்கைகளை அவர்கள் இருப்பிடத்திலேயே நிவர்த்தி செய்ய தேர்ந்தெடுக்கப்பட்ட மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் நடத்திட உத்தேசிக்கப்பட்டு, சிறப்பு அலுவலர், முதல்வரின் முகவரித் துறையின் வழிகாட்டி நெறிமுறைகள் (SOPs) வெளியிடப்பட்டுள்ளதன் அடிப்படையிலும், நகராட்சி நிர்வாக இயக்குநரின் ஆணையின்படியும் மொத்தம் 12 முகாம்கள் நடத்தப்பட்டது என்பதும், இத்திட்டத்தின் கீழ் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, தொடர்புடைய 8 சேவைகளுக்கான மனுக்களை பெற்று உரிய காலக்கெடுவிற்குள் தீர்வு காணப்படுவதற்கும், இம்முகாம் நடைபெறும் இடங்களில் தேவையான அடிப்படை வசதிகளான குடிநீர், இருக்கை வசதி, மின்சார வசதி, போதிய கணினிகள், பொது சுகாதாரம், ஆண் மற்றும் பெண்களுக்கு தனிதனியாக கழிப்பறை வசதி, மருத்துவ முதலுதவி மற்றும் உரிய இணைய சேவைகள் வசதி, முகாம் நடைபெறும் மையங்களில் முதியோர், கர்ப்பிணி பெண்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் உள்ளிட்டோர் பங்கேற்க உரிய சிறப்பு வசதிகள், அனைத்து முகாம்களும் ஒரே பகுதியில் நடத்தப்படாமல் பரவலாக அனைத்து வார்டு மக்களும் எளிதில் அணுகும் வகையில் முகாம் அமைத்து, 12 முகாம்கள் நடத்திட உத்தேசிக்கப்பட்டு (Pilot scheme உட்பட), அதற்கு தேவையான

அனைத்து அடிப்படை வசதிகள் செய்ய முறையான ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு மாமன்றத்தில் முறையாக அனுமதி பெற்று 12 முகாம்கள் அரசின் கொள்கை முடிவின்படி நடத்தப்பட்டு, அனைத்து பணிகளும் விதிகளின்படியே செய்து முடிக்கப்பட்டுள்ளது என்பதும் நாகர்கோவில் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் இளநிலை பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், மக்களுடன் முதல்வர் என்ற திட்டத்தின் மூலம் பொதுமக்களின் கோரிக்கைகளை அவர்கள் இருப்பிடத்திலேயே நிவர்த்தி செய்ய தேர்ந்தெடுக்கப்பட்ட நகாகர்கோவில் மாநகராட்சியில், 12 முகாம்கள் அரசின் கொள்கை முடிவின்படி நடத்தப்பட்டு, அனைத்து பணிகளும் விதிகளின்படியே செய்து முடிக்கப்பட்டுள்ளது என நாகர்கோவில் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் இளநிலை பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவற்றில் தெரிவித்திருந்தாலும், மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏலம் குறித்து மனுதாரர் எழுப்பியுள்ள புகார் குறித்து உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறை மூலம் விதிமீறல் மற்றும் அரசிற்கு நிதி இழப்பு ஏற்பட்டுள்ளதா என்பது குறித்து தணிக்கை செய்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டு அதன் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு நாகர்கோவில் மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2025–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 19-ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) S.V.உதயகுமார்
கதவு எண் 439A, M.S ரோடு, பார்வதிபுரம்,
நாகர்கோவில்–629 003.

(2) ஆணையர், நாகர்கோவில் மாநகராட்சி,
நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம்.

(3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெஞ்சாலை
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை 600 028.

(4) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை 600 028.

<u>நகல்</u>

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

23/9/25

செயலாளர்.

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை–600 032

23/9/25

2/11